Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 3, October 2023 E-ISSN: 2583-0481

# Traditional Agriculture of the People of Maruta Land

**Dr. P. M. Jayakala,** Assistant Professor of Tamil, S. T. Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047
DOI: 10.5281/zenodo.8397757

## Abstract

*Early Tamils divided the land into five categories namely Kurinji, Mullai, Marutham, Nethal and Palai. The people of this land were called Uzhavar, Uzhatiyar, Kadayar, Uladayar, Uran, Makizhan, and Kalamar. The land they cultivated was called Palanam, Vyal, Kalani, Seru, Kalam, Panay, Pulam. They prepared the land with a tool called 'Talambu' and the seeds were sown. The sprouted seedlings were planted in the prepared land by the ploughman. The water collected in the reservoirs was used for agriculture. Animal waste and leaves were used as fertilizer for crops. Weeders remove unwanted weeds growing through the crops. When the crops were ready for harvest, they were harvested with sickles. Then they collected the grains in the sheds in the houses. The people of Marutam land ate food such as sugarcane, sweet potato, rice, jackfruit, crab, deer's food, aval, pedaikozhi, rice, milk, pongal fruit juice mixed with urad dal, swordfish etc. This article decodes the traditional agricultural methods used in the Marutham Land.*

**Keywords:** Tradition, Maruta Land, Agriculture, Tamil People.

## References

[1] Alice, A. Dr. *Patirruppattu.* New Century Book House, Chennai-98, 2014.
[2] Karunanidhi, M. Dr. *Thirukkural.* Thirumagal Nilayam, Chennai.
[3] Jeyapal, R. Dr. *Agananooru.* New Century Book House, Chennai-98, 2014.
[4] Dakshinamurthy, A. *Inkurunuru*. New Century Book House, Chennai-98, 2014.
[5] Nagarajan, V. Dr. *Kuruntokai.* New Century Book House, Chennai-98, 2014.
[6] Bhaktavatchala Bharathi. *Tamizhar Unavu*. Kalachuvadu, Nagercoil - 629 001, 2014.
[7] Padmapriya, K. "*Tirukkuralilnir Melanmai Sintanaikal.*" *Naveena Thamizh Aaivu*, ISSN: 2321-984X, August 2021.
[8] Balasubramian, K.V. *Nattirinai.* New Century Book House, Chennai-98, 2014.
[9] Puliyurkesikan. *Purananuru*. Pari Nilaiyam, Chennai – 600 108, 2002.
[10] Manimekalai, M. Dr. "*Purananuru Kattum Velan Pannikalum Tolilnutpankalum.*" *Tamil Aayvu Sankam Pannattu Ayvithal*, ISSN-2320-3412, April-September 2020.
[11] Mohan, R. Dr. *Pattuppattu* (1, 2). New Century Book House, Chennai-98, 2014.
[12] Vimalarani, A. Dr. "Tamilarin Unavu Vakaikal." *Int. Jour. of Tamil*, October - 2022.
[13] Jasmine Priya, T. "Valluvar Kurum Unavum Maruntum." *IJTLLS*, E–ISSN: 2581–7140, Vol – 02, Spl. Issue IV, December 2020.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

# மருத நில மக்களின் மரபுசார் வேளாண்மை

**முனைவர் பா. ம. ஜெயகலா**, உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்,
தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047
DOI: 10.5281/zenodo.8397757

**ஆய்வுச்சுருக்கம்**

*ஆரம்பகால மனிதன் நிலத்தினை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாக பகுத்துக் கொண்டான். பகுத்துக்கொண்ட நிலத்திற்கு முதல், கரு, உரிப்பொருட்களை வரையறுத்து வாழ்ந்து வந்தான். இந்நிலங்களில் ஒன்றான மருத நிலத்தை 'மென்புலம்' என்றனர். இந்நில மக்களை உழவர், உழத்தியர், கடையர், கடைசியர், ஊரன், மகிழன், களமர் என்றழைத்துள்ளனர். இவர்கள் வேளாண்மை செய்த நிலத்தை பழனம், வயல், கழனி ,செறு, களம், பணை, புலம் என்றனர். மருத நில மக்கள் வேளாண்மையை முதன்மையாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். பயிரிடும் நிலத்தை ஏர், உழுபடை, நாஞ்சில் கருவிகள் மூலம் செம்மைப்படுத்தினர். செம்மைப்படுத்திய நிலத்தை 'தளம்பு 'என்னும் கருவியால் சமன் செய்து விதைகளை விதைத்தனர். முளைவிட்ட நாற்றுக்களை உழவன், உழத்தியர் சேர்ந்துச் செம்மைப்படுத்திய நிலத்தில் நட்டனர். நீர்நிலைகளில் சேகரித்த நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்தினர். வேளாண் பயிர்களுக்கு கால்நடைகளின் கழிவுகளையும் மட்கிய இலை, தழைகளையும் உரமாகப் பயன்படுத்தினர். பயிர்களின் ஊடே வளரும் தேவையற்ற களைகளை களைக்கொட்டியினால் களைஞர்கள் அகற்றினர். அறுவடைக்குத் தயாரானப் பயிர்களை அரிவாளால் அறுவடைச் செய்தனர். அறுவடைக்குப்பின் நெல் முதலிய தானியங்களை கடாவிட்டு அடித்துத் தூசுகளைப் போக்கினர். அதன்பின் தானியங்களை இல்லங்களில் உள்ள குதிர்களில் சேகரித்து வைத்தனர். மனிதன் வேளாண்மையின் மூலம் தனக்குத் தேவையான உணவினைப் பெற்றுக் கொண்டான். மருத நிலத்து மக்கள் கரும்பு, வெண்ணெல், செந்நெல், கள், நுங்கு, பாகற்பழம், பலாப்பழம், நண்டு, மானின் ஊண், அவல், பெடைக்கோழி, பயிறு, பால், உளுத்தம் பருப்போடு கலந்த பொங்கல் பழஞ்சோறு, வாளை மீன் என்பன போன்ற உணவினை உண்டுள்ளனர். தங்கள் நிலத்தில் வேளாண்மை செய்தவற்றையும் மற்ற நிலங்களில் பண்டமாற்று முறையில் பெற்றதையும் உணவாக உண்டுள்ளனர்.*

**திறவுச் சொற்கள்:** பாரம்பரியம், மருத நிலம், விவசாயம், தமிழ் மக்கள்.

**முன்னுரை**

உலகின் மூத்த குடியான தமிழ் குடி மிகவும் பழமையானது.' கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி' என்ற பெருமையைப் பெற்றது. நம் குடியின் பண்பாட்டு விழுமியங்களை நமக்கு இன்று எடுத்துரைப்பவை கால

கண்ணாடியாகிய இலக்கியங்களே. பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் தமிழ்நாட்டின் எல்லையை, 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகம்' என தன் பாயிரத்தில் சுட்டுகின்றது. இத்தகைய எல்லையில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் நிலத்தினை ஐந்திணையாகப் பாகுபடுத்தியுள்ளனர்.அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். உலக இலக்கியங்களின் இமயம் என்று போற்றப்படுகின்ற சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மருத நில மக்களின் வேளாண்மையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நிலப் பாகுபாடு**

ஆரம்ப காலத்தில் நாடோடிகளாக வாழ்ந்த ஆதி மனிதன் காய்களையும் கனிகளையும் வேட்டையாடிய விலங்குகளையும் உணவாக உட்கொண்டு வாழ்ந்தான். பின்னர் நாகரிகம் வளர வளர உணவினைச் சமைத்து சாப்பிட கற்றுக்கொண்டு ஓர் இடத்தில் கூட்டமாக கூடி வாழ ஆரம்பித்தான். நாகரீகத்தின் வளர்ச்சியால் இப்படி தான் வாழ வேண்டும் என தன்னை நெறிப்படுத்திக் கொண்டான். நிலத்தினை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளாகப் பகுத்துக் கொண்டான். மலையும் மலை சார்ந்த இடமான குறிஞ்சியும், காடும் காடுச் சார்ந்த இடமான முல்லையும் கரடு முரடாகவும் நீர்வளம் குறைந்தும் காணப்படுவதால் அந்நிலங்களை 'வன்புலம்' என்றனர். இதனை, **வன்புல காட்டு நாட்டதுவே (நற்., பா. 59: 6)** இவ்வரி சுட்டுகின்றது. இங்கு முல்லை நிலத்தை 'வன்புலம்' என நற்றிணை குறிப்பிடுகின்றது. புறநானூறு குறிஞ்சி நில மன்னனான அரசன் கோதையனை, **வன்புல நாடன் (புறம்., பா. 172: 8)** என எடுத்துரைக்கிறது. வயலும் வயல் சார்ந்த இடமான மருதநிலம் நீர் வளம்மிக்க வேளாண்மை செய்ய ஏற்ற நிலமாகும். மருதநிலத்தை 'மென்புலம்' என்று அழைத்ததை, **மென்புல வைப்பின் நன்நாட்டுப் பொருவ (புறம்., பா. 42: 18)** என்ற புறநானூற்று அடி நமக்குப் பறைசாற்றுகின்றது. இயற்கையாக நீர் வளம் இல்லாமல் மனிதனால் செயற்கையாக பாசன வசதிகளை ஏற்படுத்திய நிலத்தினை 'புன்புலம்' என்று அழைத்தனர். புன்புலம் என்பது தரிசு நிலம் (wasteland) என அகராதிகள் பொருளுரைக்கின்றன. மழை குறைந்த புன்புலத்தில் வேலமரம் வளர்ந்திருந்ததை,

**சிறியிலை வேலம் பெரிய தோன்றும்**
**புன்புலம் வித்தும் வன் கை வினைஞர் (ப. பத்து., பா. 58: 14-15)**

இப்பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. களர் நிலம் என்பது உப்பின் தன்மை அதிகமாக காணப்படும் நிலமாகும். நுண்ணுயிர்களின் செயல்திறன் குறைவாகவே காணப்படும். இதனை 'உவர் நிலம்' என்றும் அழைப்பர். இதனை, **களர்ப்படு கூவல் தோண்டி, நாளும் (புறம்., பா. 311: 1)** இப்புறநானூற்று வரி களர் என்றால் உவர் நிலம் எனச் சுட்டுகின்றது.

**மருத நிலம்**

பண்டைய தமிழர்கள் பகுத்த ஐவகை நிலங்களில் ஒன்று மருத நிலமாகும். சங்க இலக்கியங்கள் நீர்வளம் மிகுதியான பகுதியாகிய மருத நிலத்தை மென்புலம் என குறிப்பிடுகின்றன. வயலும் வயல் சார்ந்த இடம் மருதமாகும். மருத நில மக்கள் வேளாண்மை

செய்த நிலத்தை இலக்கியங்கள் பழனம், வயல், கழனி, செறு, களம், செய், தண்டலை, பணை, புலம் எனப் பல பெயர்களில் குறிப்பிடுகின்றன. நம்பி அகப்பொருள்,

**வரையே சுரமே புறவே பழனம்**

**திரையே அவையவை சேர்தரும் இடனே**

**என ஈர் ஐவகைத்து அனையியல் நிலமே (நம்பி., நூ. 9)**

இந்நூற்பா வழி பழனம் என்று குறிப்பிடுவதை அறிய முடிகிறது. மேலும்,

**கழனி மாஅத்து விளைந்து உகு தீம்பழம் (குறுந்., பா. 8: 1)**

**பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை**

**கழனி நாரை உரைத்தலின், செந்நெல் (நற்., பா. 180: 1-2)**

**பசி என அறியாப் பணை பயில் இருக்கை (அகம்., பா. 91:14)**

இவ்வடிகள் மருத நிலத்தின் வேறு பெயர்களைச் சுட்டுகின்றன. மருத நிலத்தில் தாழ்ந்த தெங்கினை உடைய மருத நில மரச் சோலைகளும் நெல் வயல்களும் நிரம்பி காட்சியளிப்பதனை,

**மாமா வயின் வயின் நெல்**

**தாழ் தாழை தண் தண்டலை (பொரு., பா. 181-182)**

இவ்வடிகள் சுட்டுகின்றன. மருதநிலத்து காஞ்சிமரத்திலும், ஓங்கி வளர்ந்த மருத மரத்திலும் குறிஞ்சி நிலத்துப் பெடை மயில்கள் தன் தோகையை விரித்து ஆடியதை,

**முடக்காஞ்சிச் செம்மருதின்**

**மடக்கண்ண மயில் ஆல (பொரு., பா. 189-190)**

என்ற இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன. காஞ்சி மரங்கள், கயல் மீனை கவர்ந்துச் செல்லும் சிச்சிலப்பறவைகள், வெண் தாமரை மலர்கள், மலர்களில் தேனை கவரும் வண்டுகள், குளிர்ந்த வயல்கள், அகன்ற வீடுகள் என மருத நிலம் காட்சியளிப்பதை,

**நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்**

**குறுங்காற் காஞ்சிக் கொம்பர் ஏறி**

**…அந்தணர் அருகா அருங்கடி வயல் நகர் (சிறு. பாண்., பா. 178-187)**

என்ற அடிகள் வழி அறியலாம். இத்தகைய வளம் செறிந்த நிலத்தில் வாழும் மக்கள் உழவர், உழத்தியர், கடையர், கடைசியர், ஊரன், மகிழன், களமர் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர். நம்பி அகப்பொருள் மருத நில மக்களை, **உழவர் உழத்தியர் கடையர் கடைசியர் (நம்பி., நூ. 23)** என்ன சுட்டுகிறது தொல்காப்பியம் மருத மக்கள் என்று எவரையும் சுட்டு கூறவில்லை.

**வேளாண்மை**

மருத நில மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தைச் செம்மைப்படுத்த வேளாண்மை செய்தலை முதன்மையாக கொண்டிருந்தனர். இந்நிலம் இயற்கை வளம் மிக்க நீர் வளம் குன்றாத நீண்ட நெடிய சமவெளி பரப்பு. புன்செய்நிலம் இடம் அகன்றும் விளைச்சல்

பெருகாமலும் இருந்தால் அந்நிலம் பயனற்றதாகும். செம்மையான இடத்தில் தான் வேளாண்மை செய்துள்ளனர். மருதநில மக்களின் வேளாண்மை பயிர்களில் நெல், கரும்பு, வாழை, வெற்றிலை, உளுந்து, செந்நெல், வெண்ணெல் என்பன முக்கியத்துவம் பெற்றன.

**உழுதல்**

வேளாண்மையின் தொடக்கம் நிலத்தை உழுதுப் பயன்படுத்துதல் ஆகும். பயிரிடும் நிலத்தின் மண்ணை உழவு கருவிகள் கொண்டு மேலும் கீழுமாக புரட்டி உலர விட்டு செம்மைப்படுத்துவர்.உழவுத் தொழிலே தலையாயத் தொழில் என்பதை,

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை (குறள். 1031)**

இக்ககுறள் வழி வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். உழவுத் தொழில் செய்பவரே உலகத்தில் உள்ளவர்களுக்கு அச்சாணி போன்றவர்கள் என்கிறார் வள்ளுவர். உழுதலுக்குப் பயன்படும் கருவிகளை ஏர், உழு படை (கலப்பை), நாஞ்சில் எந்த பெயர்களில் அழைக்கின்றனர். எழுதுகளைக் கொண்ட உழவர்கள் ஏர்களைப் பூட்டி மண்பிறழும்படி அரிதாளையுடைய நிலம் பிளவுபடும் படி உழுதலை,

**நெடு நெல் அடைச்சிய கழனி ஏர் புகுந்து**
**குடுமிக் கட்டிய படப்பையொடு மிளிர**
**அரிகால் போழ்ந்த தெரி பகட்டு உழவர் (அகம்., பா. 41: 4-6)**

இவ்வடிகள் பகர்கின்றனர். மருத நிலத்தில் பெரிய எருதுகளை நுகத்தில் பூட்டி வளைந்த வாயையுடைய கலப்பையால் உடும்பு முகம் போன்ற முழுக் கொழு மறையும் படி வளைய உழுது, விதைத்து, பின்னர் களைக்கொட்டால் களைகளைக் களைந்து பயிர் விளைவித்ததை,

**…குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்**
**நடைநவில் பெரும்பகடு புதவில் பூட்டி**
**பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்**
**உடுப்பு முகமுழுக் கொழுமீழ்க ஊன்றி**
**தொடுப்பு எறிந்து உழுத துளர்படு துடவை (பெரும்., பா. 196-201)**

இவ்வரிகள் மூலம் அறிய முடிகின்றது.

**நிலத்தைச் சமன் செய்தல்**

நிலத்தை நன்றாக உழுத பின்னர் அதன் மேற்பரப்பை மேடுபள்ளம் இல்லாதவாறு சரி செய்வர். இதனால் நிலம் சமனடையும். நிலத்தின் நீர்ப் பாசனமும் ஒரே சீராக இருக்கும். இதற்கு 'தளம்பு' என்னும் கருவியினைப் பயன்படுத்தியுள்ளனர். "தளம்பு என்பது சேற்றுக் கட்டியை உடைக்கும் பல் போன்ற அமைப்பை உடைய கருவியாகும். இது வயலில் உள்ள சேற்றுக் கட்டிகளை உடைத்து நிலத்தை சமன்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது" (மணிமேகலை., ம. பக். 41 - 42). புறநானூறு நிலத்தைச் சமன் செய்ய தளம்பு என்னும் கருவியினைப் பயன்படுத்தியதை எடுத்துரைக்கிறது.

**விதைகளை விதைத்தல்**

விவசாய நிலத்தை நன்கு உழுதுச் செம்மைப்படுத்திய பின்பு விதைகளை விதைப்பர். சங்க இலக்கியங்களில் விதைகள் விதைத்த செய்திகளை காண முடிகின்றது. உழுது சீர் செய்த நிலத்தில் விதைகளை விதைப்பதற்காக கடகப்பெட்டியில் எடுத்துச் சென்றதை,

**அரிகால் மாறிய அம் கண் அகல் வயல்**

**மறு கால் உழுத ஈரச் செறுவின்**

**வித்தோடு சென்ற வட்டி பற்பல (நற்., பா. 210: 1-3)**

இவ்வரிகள் புலப்படுத்துகின்றன. விதைகளை கடகப்பெட்டியில் வைத்துப் பாதுகாத்துள்ளனர். உழவர்கள் விதைப்பதற்காக சிறிய கூடைகளில் விதைகளை எடுத்துச் சென்றதை,

**... ஆர்கலி உழவர்**

**விதைக் குறு வட்டி போதொடு பொதுள (குறுந்., பா. 155: 1-2)**

இவ்வடிகள் கூறுகின்றன. புன்செய் நிலத்தில் மருத நில மக்கள் மழை பெய்த பின்னர் கலப்பையால் உழுது நிலத்தைத் தயார் செய்வர். உழவர்கள் ஏர் கொண்டு உழுது பின்னர் விதைகளை விதைப்பர்.

**நாற்று நடுதல்**

சமன் செய்து செம்மைப்படுத்திய நிலத்தில் நாற்றுகளை ஊன்றுதல் 'நாற்று நடுதல்' என்பர். நண்டின் வளைகள் சிதையும் படியும் பசிய கோரையைக் குத்தியும் ஆனேறுகள் தம்முள் போரிட்டமையால் சேறாகிய வயலின் கண், அச்சேற்றை சமன்பட மிதித்த உழவர்கள் முடி நாற்றை நட்டதனை,

**... மென் தோல்**

**மிதிஉலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன**

**கவைத்தாள் அலவன் அளற்றுஅளை சிதைய**

**பைஞ்சாய் கொன்றை மண்படு மருப்பின்**

**கார்ஏறு பொருத கண்அகன் செறுவின்**

**உழாஅ நுண்தொளி நிரவிய வினைஞர்**

**முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செறுவில் (பெரும்., பா. 206-212)**

இவ்வரிகள் புலப்படுத்துகின்றன.

**நீர்ப்பாசனம்**

வேளாண்மை சிறப்புற அமைய காரணமாக இருப்பவை நீர் நிலைகளே. உழவர்கள் மழை நீரைத் தேக்கி தடாகம், பொய்கை, குட்டம், குளம், ஏரி, மடு, மடை போன்ற நீர்நிலைகளில் சேகரித்து தன் தேவைக்கு அவற்றிலிருந்துப் பயன்படுத்திக் கொண்டனர்.

**உலகத்தில் உள்ள உயிரினத்திற்கு மூலாதாரமாக இருப்பது நீர். இந்த நீரின் பெருமையை நான்குணர்ந்து 2000 ஆண்டுகளுக்கு முன்பே நீரினைச் சேமித்து வைக்க எண்ணற்ற நீர்நிலைகளைக் கட்டியுள்ளனர் நமது முன்னோர்கள். நீர்நிலைகளைக்**

**கட்டியதோடு மட்டுமல்லாமல் நீரினைப் பங்கிட்டு கொள்ளவும், பாதுகாக்கவும் பலரை நியமித்து உள்ளனர். (பத்மப்ரியா, கு. ப.210).**

குடபுலவியனார் எனும் புலவர் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் நீர் நிலைகளை உருவாக்கி வேளாண்மையைப் பெருக்குவதே மன்னர்க்கு வலிமையையும் புகழையும் தரும் என்கிறார். இதனை,

**அடுபோர்ச் செழிய இகழாது வல்லே**
**நிலன்நெறி மருங்கின் நீர்நிலை பெருகத்**
**தட்டோர் அம்ம இவண்தட் டோரே**
**தள்ளா தோர்இவன் தள்ளா தோரே (புறம்., பா. 18: 27 - 30)**

என்ற அடிகள் விளக்குகின்றன. உழவர்கள் தம் வயல்களில் காஞ்சி மரத்தின் சிறு துண்டுகளை நட்டு கரும்பின் கழிகளைக் குறுக்கே நெருக்கமாக வைத்து பள்ளங்களை உருவாக்கி நீரினைத் தேக்கியதை,

**கள்ஆர் உவகைக் கலிமகழ் உழவர்**
**காஞ்சிஅம் குறுந்தறி குத்தி, தீம் சுவை**
**மென்கழைக் கரும்பின் நன்பல மிடைந்து**
**பெருஞ்செய் நெல்லின் பாசவல்பொத்தி (அகம்., பா. 346: 5-8)**

இவரிகள் கூறுகின்றன.

**எரு இடுதல்**

பயிர்கள் செழித்து வளர உரம் வைத்தல் இன்றியமையாத ஒன்றாகும். பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்து உரங்களின் மூலம் கிடைக்கிறது. கால்நடைகளின் கழிவு பொருட்களையும், மட்கிய இலை தழைகளையும் உரமாக பயிர்களுக்குப் பயன்படுத்தியுள்ளனர். பயிர்களுக்கு,

**தொழு உரத்தையும் பசுந்தாள் உரத்தினையும் இடவேண்டுமென தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரை வழங்குகின்றது. தொழு எரு அல்லது மக்கு உரம் ஒரு ஏக்கருக்கு 12.5 டன்னும், பசுந்தாள் உரமெனின் ஒரு ஏக்கருக்கு 6.25 டன் இட வேண்டுமெனவும் மேலும் தொழு உரப் பயன்பாடு நெல்லின் வளர்ச்சி மற்றும் நெல்லின் மகசூலை அதிகரிக்கின்றது எனவும் ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. (மணிமேகலை, ம. ப. 42)**

உழுது செம்மைப்படுத்திய நிலங்களில் கால்நடைகளின் சாணத்தையும் இலை தழைகளையும் எருவாக பயன்படுத்தியுள்ளனர். காஞ்சி மரத்தின் மகரந்தத் துகள்களை வயல்களுக்கு எருவாக பயன்படுத்தியதை,

**பயறு போல் இணர பைந்தாது படீஇயர்**
**உழவர் வாங்கிய கமிழ்பூ மென்சினை (குறுந்., பா.10: 2-3)**

குறுந்தொகை பாடலின் வரிகள் வழி அறிய முடிகிறது.

**களை எடுத்தல்**

நாம் பயிர் செய்யும் தாவரங்களின் ஊடே வளரும் தேவையற்ற தாவரங்களை 'களை' என்பர். களைஞர் என்போர் களைகளைப் பறித்தல் தொழில் செய்ததை, **களைஞர் தந்த கணக்கால் நெய்தற் (பெரும்., ப. 213)** இவ்வரி சுட்டுகின்றது. கொம்புடைய ஓலை குடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்ட கொல்லை உழவர்கள், பறையை முழக்கி ஒலியை எழுப்பிக் களைக் கொட்டியினால் களையினைப் பறித்ததை,

**கறந்துபறைச் சீரின் இரங்க வாங்கி**
**களைக்கால் கழீஇய பெரும்புன வரகின் (அகம்., பா. 194: 8-9)**

என்ற அடிகள் சுட்டுகின்றன.

**அறுவடை**

களமர் என்ற உழவர்கள் கழனிகளில் விளைந்த கரும்பு மற்றும் நெல்லினை அறுவடை செய்ததனை, **அறைக் கரும்பின் அரி நெல்லின் / இனக் களமர் இசை பெருக (பொரு., பா. 193-194)** இவ்வடிகள் புலப்படுத்துகின்றன. அறுவடை செய்தல் என்னும் தொழில் நடைபெற்றதனை *பொருநராற்றுப்படை* எடுத்துரைக்கின்றது. நெல்லினை அறுவடைச் செய்வோர் அந் நிலங்களில் வாழும் பறவைகளைப் பறையறைந்து விரட்டியதை,

**வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ (புறம்., பா. 348: 1)**

**வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை படுபுள் ளோப்பும் (அகம்., பா. 204: 10-11)**

இவ்வடிகள் வழி அறியலாம். செங்குளவியை ஒத்த பசுமை அற முற்றிய பெரிய செந்நெல்லின் திரண்ட தாளை உழவர்கள் அறுவடை செய்து அகன்ற களத்தில் போராக குவித்து வைத்ததை,

**கடுப்புடைப் பறவைச் சாதி அன்ன**
**பைதுஅற விளைந்த பெருஞ்செந் நெல்லின்**
**… பலிபெறு வியன்களம் மலிய ஏற்றி (பெரும்., பா. 229-233)**

இப்பாடலடிகள் அறிவுறுத்துகின்றன. நெல்முற்றிய வயல்களில் அந்நெல்லை அறுவடை செய்ததனை, **…கழனி வன்கை வினைஞர் அரிபறை (மதுரை., பா. 261-262)** இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன. நெல் அறுக்கும் தொழிலைச் செய்வோர் தம்முடைய கூரிய அரிவாளின் வாய் மழுங்கியதை சரி செய்ய ஆமையின் முதுகு ஓட்டினைத் தீட்டும் கல்லாக பயன்படுத்தியதை,

**நெல்அரி தொழுவர் கூர்வாள் மழுங்கின்**
**பின்னை மறத்தொடு அரிய கல்செத்து**
**அள்ளல் யாமைக் கூன் புறத்து உரிஞ்சும்**
**நெல்அமல் புரவின்… (புறம்., பா. 379: 3-6)**

இவ்வரிகள் புலப்படுத்துகின்றன. இதன் மூலம் அறுவடைச் செய்ய அரிவாள் கருவி பயன்படுத்தியதை அறியலாம். தொழுவர் என்னும் சொல் உழவரைக் குறிக்கிறது.

**கடா விடுதல்**

கடா விடுதல் என்பது நெல் முதலிய தானியங்களை கடாக்கொண்டு மிதிப்பித்தல் என அகராதிகள் பொருள் கூறுகின்றன. அறுவடை செய்த நெற்களை கடாவிட்டு அடித்து தூசுகளைப் போக்கி உலர்ந்த பின்னர் குவித்து வைத்துள்ளது வட திசைக் கண் உள்ள மேருமலையைப் போன்று இருந்ததை,

**குழுமு நிலைப் போரின் முழுதல் தொலைச்சி**

**…செம்பொன் மலையின் சிறப்பத் தோன்றும் (பெரும்., பா. 237-241)**

இவ்வடிகள் எடுத்துரைக்கின்றன.

உழவர்கள் ஞெண்டுகள் ஆடித் திரியும், வயல்களுக்கு அருகில் உள்ள மேட்டு நிலத்தில் அமைக்கப்பட்ட மலையைப் போன்ற நெற்போர்களை அடி முதல் அழித்துக் கடாவிட்டதனை,

**ஞெண்டு ஆடு செறுவில் தராய்க்கண் வைத்த**

**விலங்கல் அன்ன போர் முதல் தொலைஇ**

**வளம் செய் வினைஞர் வல்சி நல்க**

**துளங்கு தசும்பு வாங்கிய பசும் பொதித்தேறல் (மலை., பா. 460 - 463)**

இவ்வரிகள் குறிப்பிடுகின்றன.

**தூய்மை செய்தல்**

உழவர்கள் அறுவடை செய்த கதிர்களை களத்து மேடுகளில் அடுக்கி வைத்துள்ளனர். பின்னர் பெருங்களத்தில் கதிர்களைக் களைந்துப் பரப்பி அவற்றின் மேல் கடாவிட்டு நெல்லை வேறாகிப் பிரித்துள்ளனர். அதன்பின் திரட்டிய நெற்குவியல் (பொங்கழி) தூசியோடு காணப்படுவதால் அவற்றை முறங்களில் அள்ளி மேல் காற்றில் தூற்றியுள்ளனர். இதனை,

**குன்றுஎனக் குவைஇய குன்றாக் குப்பை**

**கடுந்தெற்று மூடையின் இடம்கெடக் கிடக்கும்**

**சாலி நெல்லின் சிறைகொள்… (பொரு., பா. 244 - 246)**

இவ்வடிகள் புலப்படுத்துகின்றன. இவ்வாறாக தூய்மை செய்த நெற்குவியலை உழவர்கள் இல்லங்களில் உள்ள குதிர்களில் சேர்த்து வைத்துள்ளனர்.

**உணவு**

உணவு உயிர்கள் அனைத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகும்.

> **மக்கள் வாழும் இடம், காலம் சூழலுக்கு ஏற்றவாறு விளைபொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தகைய தட்பவெப்ப நிலையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களே அவர்தம் உடலுக்கும், உள்ளத்திற்கும் ஏற்றதும் பொருத்தமானதும் ஆகும் (ஜாஸ்மின் பிரியா, த. பக். 3-4).**
>
> **உண்ணுதல் அடிப்படையிலேயே சமூகம் சார்ந்த செயல். தமிழ் குடும்பங்களில் உணவு ஊட்டுதல், உணவு உண்ணுதல், சாப்பாடு போடுதல், கஞ்சி வார்த்தல் இப்படியான எல்லா செயல்களிலுமே சமூகவயமாக்கம் (Socialization) நிகழ்கிறது. தமிழர் பண்பாட்டில் பிறந்த குழந்தைக்கு முதன் முதலில் உணவினை ஊட்டுதல் என்பதை**

**பண்பாட்டு வயப்பட்ட சடங்காக இன்றுவரை மக்கள் பின்பற்றி வருகின்றனர். (தமிழர் உணவு. ப. 23)**

நீர்மை இன்றி வாழாது உடல். அவ்வுடலுக்கு உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவரும் ஆவர்.

**மருத நில உணவு**

மருத நிலத்து மக்கள் கரும்பு, அவல் கொடுத்து முல்லை நிலத்து மக்களிடமிருந்து மானின் தசை மற்றும் மதுவைப் பண்டமாற்று முறையில் பெற்றதனை, **தீங் கரும்போடு அவல் வகுத்தோர் / மான் குறையொடு மது மறுகவும் (பொரு., ப.216-217)** இவ்வடிகள் சுட்டுகின்றன. இதன் மூலம் மருத நிலத்து மக்கள் கரும்பு, அவல், மானின் தசை, மது இவற்றை உணவாக உட்கொண்டுள்ளதை அறிய முடிகின்றது. கள் என்பது பனை, தென்னை மரங்களிருந்து கிடைக்கும் ஒரு வகை பானம்.

**சங்ககாலத்தில் அரசன் முதல் புலவர் வரை தேறல் உண்ணும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர். தென்னங்கள், பனங்கள், அரிசிக்கள் என்று பலவகையான கள் வகைகள் இருந்தன. குறிஞ்சிநில மக்கள் அங்கு கிடைக்கும் மூங்கில் அரிசியைக் கொண்டு கள் தயாரித்தனர். அதை மூங்கில் குழாய்களில் வைத்திருந்தனர். அதற்கு 'தேக்கள் தேறல்' என்று பெயர் (விமலா ராணி, அ. ப. 481).**

மருதநில மக்கள் கள்ளினையும், பனை மரத்தின் நுங்கினையும் உணவாக உண்டதனை,

**கள் ஆர் களமர் (மதுரை., ப.260)**

**கள்ளின் கேளிர் ஆர்த்திய உள்ளூர்ப்**
**பனைதந்த பஞ்சிஅம் குறுங்காய்.. (குறுந்., ப 293: 1-3)**

இவ்வடிகள் வழி அறியலாம். மருத நிலத்துப் பழுத்த பாகற்பழத்தையும் கொத்துக்கொத்தாக தொங்கும் செவ்விய சுளைகளையுடைய பலாப்பழங்களையும் குறிஞ்சி நிலத்து மயில்கள் வந்து உண்டதை, **பைம்பாகற் பழம் துணரிய / செஞ்சுளைய கனி மாந்தி (பொரு., ப.191-192)** இவ்வரிகள் வழி அறியலாம். மருதநிலமக்கள் பழுத்த பாகற்பழத்தையும், பலாப்பழங்களையும் உணவாக உட்கொண்டனர் என்பதை அறிய முடிகின்றது. சிறுபாணர்களுக்கு மருதநில மக்கள் அமலை வெண்சோற்றினை நண்டினது கலவையோடு உண்ண கொடுத்ததை,

**அவைப்பு மாண்அரிசி அமலை வெண்சோறு**
**கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுவிர் (சிறு.பாண்., பா. 194-195)**

இவ்வடிகள் விளக்குகின்றன. மருத நில மக்கள் தங்கள் கழனிகளில் பயிரிட்ட வெண் சோற்றோடு நண்டினையும் சமைத்து உண்டுள்ளனர். மருத நில மக்கள் வைக்கோல் வேய்ந்த குடிசையின் முற்றத்தில் இருக்கும் உரலில் அவலை இடித்து உண்டுள்ளனர். உழவர்கள் தம் உழைப்பால் பெற்ற வெண்மை நிற நெல் சோற்றினை பெடை கோழியோடு சமைத்துப் பாணர்களுக்கு கொடுத்துள்ளனர். மேலும், கரும்பின் இனிய சாற்றினையும் பருக கொடுத்துள்ளனர். இதனை,

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054
இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

**வினைஞர் தந்த வெண்ணல் வல்சி**
**மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர் (பெரும்., பா. 255-256)**
**விசயம் அடூஉம் புகைசூழ் ஆலை தொறும்**
**கரும்பின் தீம்சாறு விரும்பினிர் (பெரும்., பா. 261-262)**

இவ்வரிகள் சுட்டுகின்றன.

உழவர்கள் விடியற்காலையில் பழஞ் சோற்றை உண்டனர். மாங்காய் சாற்றுடன் புளிப்பு சுவையுடைய மாதுளம் காயைச் சேர்த்து அச்சாற்றினை வெயிலில் உலர வைத்துப் பதப்படுத்தி இது உடல் உழைப்பால் ஏற்பட்ட களைப்பையும் கள்ளுண்ட மயக்கத்தையும் தீர்க்கும் தன்மை கொண்டது என்கின்றனர். இதனை,

**…கிளி போல் காய கிளைத்துணர் வடித்துப்**
**புளிப்பதன் அமைத்த புதுக்குட மலிர்நிறை**
**வெயில்வெரிந் நிறுத்த பயிலிதழ் பசுங்குடை**
**கயமண்டு பகட்டின் பருகி (அகம்., பா. 37: 7 - 11)**

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. கள் என்ற பானத்தைப் பருகியதையும் கள்ளினால் வரும் மயக்கத்தை தீர்க்க பதப்படுத்தியதை உண்டதையும் அறிய முடிகின்றது. வயலிடத்தே பொய்கையில் கிடைத்த பருத்த வாளை மீனைத் துணைக் கறியாக கொண்டு புது நெல்லின் வெண்சோற்றை உழவர்கள் உண்டு மகிழ்ந்ததை,

**பழன வாளைப் பரூஉக்கண் துணியில்**
**புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை ஆக**
**விலாப்புடை மருங்கு வசிப்ப மாந்தி (புறம்., பா. 61: 4 – 6)**

இவ்வரிகள் சுட்டுகின்றன. நெல்லை அறுவடைச் செய்யும் உழவர்கள் முகையவிழ்கின்ற மென்மையான இதழ்கள் அவிழ்ந்த ஆம்பலின் அகன்ற இலையில் மதுவை உண்டதை *புறநானூறு* கூறுகின்றது.

**முடிவுரை**

மருத நிலம் வளம் நிறைந்த நிலமாகும். இதனை மென்புலம் என்றனர். இந்நிலத்தில் வேளாண்மை செம்மையாகச் சிறப்பாக நடைபெற்றது. வேளாண்மைச் செய்யும் நிலத்தை பழனம், வயல், கழனி, செறு, களம், பணை, புலம் என பல பெயர்களில் அழைத்தனர். மருதநில மக்களுக்கு வேளாண்மையே வாழ்வின் அடிப்படை ஆதாரமாகும். அவர்களின் வாழ்க்கை விவசாயத்தை சார்ந்திருந்தது. வேளாண்மை செய்யும் நிலத்தை ஏர், உழுபடை (கலப்பை), நாஞ்சில் கருவிகள், தளும்பு என்னும் கருவிகளால் சமன் செய்து விதைகளை விதைத்துள்ளனர். பின்பு விதையிடப்பட்ட நாற்றுக்களை உழத்தியர் செம்மைப் படுத்திய நிலத்தில் நட்டனர். மழை நீரினை நீர் நிலைகளில் சேகரித்துப் பயிர்களுக்குப் பயன்படுத்தினர். பயிர்கள் செழித்து வளர கால்நடைகளின் கழிவுகளையும் மட்கிய இலை தழைகளையும் உரமாகப் பயன்படுத்தியுள்ளனர். வேளாண் பயிர்களுக்கு இடையே வளரும் தேவையற்ற களையினை

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

அகற்றி பயிர்களை நன்முறையில் வளர்த்து அறுவடை செய்தனர். அறுவடைக்குப் பின் தானியங்களை கடா விட்டு அடித்து, தூய்மை செய்து குதிர்களில் சேகரித்து வைத்தனர். மருதநில மக்கள் கரும்பு, வெண்ணெல், செந்நெல், கள், நுங்கு, நண்டு, அவல், பெடை கோழி, பயிறு, பால், மாமிசம், மீன் போன்ற உணவுகளை உண்டுள்ளனர். இவ்வுணவுகள் மருத நிலத்தில் பயிர் செய்தவையும் மற்ற நிலங்களில் பண்டமாற்று முறையில் பெற்றவையும் ஆகும். இதனை கூறும் விதத்தில் இவ்வாய்வு கட்டுரை அமைந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**

[1] ஆலிஸ், அ. முனைவர். *பதிற்றுப்பத்து.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை -98, 2014.
[2] கருணாநிதி, மு.கலைஞர். *திருக்குறள்.* திருமகள் நிலையம், சென்னை 17, 2003.
[3] செயபால், இரா. முனைவர். *அகநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, 2014.
[4] தட்சிணாமூர்த்தி, அ.*ஐங்குறுநூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை -98, 2014.
[5] நாகராசன், வி. முனைவர். *குறுந்தொகை.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.
[6] பக்தவத்சல பாரதி. *தமிழர் உணவு.* காலச்சுவடு, நாகர்கோவில் - 629 001, 2014.
[7] பத்மபிரியா, கு. "திருக்குறளில் நீர் மேலாண்மை சிந்தனைகள்." *நவீன தமிழாய்வு*, ISSN:2321-984X, ஆகஸ்ட் 2021.
[8] பாலசுப்பிரமணியன், கு.வெ. *நற்றிணை.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.
[9] புலியூர்கேசிகன். *புறநானூறு.* பாரி நிலையம், சென்னை – 600108, 2002.
[10] மணிமேகலை, மா. முனைவர். "புறநானூறு காட்டும் வேளாண் பணிகளும் தொழில்நுட்பங்களும்." *தமிழ் ஆய்வு சங்கம் - பன்னாட்டு ஆய்விதழ்*, ISSN-2320-3412, ஏப்ரல் - செப்டம்பர் 2020.
[11] மோகன், ரா. முனைவர். *பத்துப்பாட்டு* (1, 2). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.
[12] விமலாராணி, அ. முனைவர். "தமிழரின் உணவு வகைகள்." *சர்வதேச தமிழ் ஆய்விதழ்*, E-ISSN: 2582 - 1113, அக்டோபர் 2022.
[13] ஜாஸ்மின் பிரியா, த. "வள்ளுவர் கூறும் உணவும் மருந்தும்." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, vol-2 E–ISSN: 2581–7140, சிறப்பிதழ் - 4 மார்ச் 2020.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.